உ

ஸ்ரீராமஜெபம்.

கலியுகச்சிந்து.

கடன்பத்திரம்.

கலிகாலக்கண்ணாடி.

இம்மூன்றுமடங்கியிருக்கிறது.

இஃது

இவை சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரால்

இயற்றப்பட்டு.

—()—

சென்னை இட்டா

பார்த்தசாரதிநாயுடு.

அவர்களாற்றமது

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 1. திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன்பேட்டை

MADRAS.

1898.

உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

(*)

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

காலத்தைப்பாராய்—கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்.

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை	ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே	வேலொத்தவிழியாளே (கா)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு	பணமாய்முழிக்குது
ஐயையோயேழைகள்	புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல்	வாரண்டாய்திரியுது
வாங்கியகடனுதான்	கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்புரட்டாசைப்பசிகூட	பொளக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம்	ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம்	பஞ்சாய்பறக்குது
காடுமேடுகளெல்லாங்	சுட்டுதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட	பிழைப்பதரிதாய்போச்சி (கால)
மழையோமழையோவென்று	மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுசெள்பேச்சி	புல்லுக்கலையலாச்சி
தரையும்உலர்ந்துபோச்சி	தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும்	வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுப்போச்சிதாயார்தமக்கைபோலே	பெண்தேடலாச்சு
கொண்டமனைவிபேச்சி	கூழுக்கலையலாச்சு
கூத்தியார்பாதத்தைக்	காத்துயிருக்கலாச்சி
சொந்தபடிப்பெல்லாம்	சூத்தக்ருமணையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு	நல்லபிழைப்பாச்சு (கால)
காட்டில்மழையாச்சி	கழனியுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலே	பிரப்பிற்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம்	பொரியாய்ப்பறந்துபோச்சி
பிள்ளைக்குட்டிகளெல்லாங்	சுஞ்சிக்கலையலாச்சி

மண்மாரியாச்சிநாட்டுப்புறங்களெல்லாங்கண்மாரியாச்சி

யிருந்தவிரைகளெல்லாம்	யேனோவிதைத்தோமென்று
யிரவும்பகலுமாக	முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா	பிடிபிடிஆமென்று
எழிட்டுபேறுக	வீட்டைவளைந்துகொண்டு

ஜப்திகளாக்கிஆடுமாடுகளெல்லாம்யேலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சிதட்டுமுட்டுகளெல்லாம்வியாபாரமாச்சி
களிதின்றுபிழைக்கவும் கேலிறுமுரைக்குது
கம்புசோளங்கள்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குப்போனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
கொடுத்தாலும்நாலாநாள் அடித்துத்துறத்துது (கால)

சீமைசிட்டிகளெல்லாம் சிறிப்பாய்சிறித்துப்போச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்போச்சி
பெருமையாய்பிழைத்தவர் பிழைப்புக்கும்பிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேற்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி சர்வகுலங்களும் நடைதப்பிப்போச்சி
அந்தணர்குலத்துட ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பணமேற்றாங்குது
பணமென்றாற்பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்குத்தொங்குது (கால)

தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பித்தமையன்பெண்டை தெம்பாயிளுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகனைப்பிரியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுப்போச்சி பணமேபெருமையாச்சி ஜாதிகள்போச்சி
பலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போதே அடுத்துப்புணரலாச்சி
கலங்கிவேசையரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவிசொல் விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி தகப்பன்பிள்ளையுங்கூடவழக்காடலாச்சி
பூமியிற்பிழைப்பற்று தாவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்கும் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குச்சீச்சி (கால)

கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
சொடுத்தகடனைக்கேட்டால் கோட்டுக்கிழுக்கலாச்சி
கொஞ்சமேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சி பெரியோர்சிறியோரென்ற அளவெல்லாம்
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி
திருட்டுப்பிள்ளைகள்பெற்று முறித்துயெறியலாச்சு
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்தொருவராச்சி (கால)

கட்டிக்கொடுக்குமுன்னே — கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் — பெற்றுமுரிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே — மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சி — தலையைக்குனியலாச்சி
அதிகமாய்போச்சி குடிகெட்டிமுண்டைகள் அணிபணியாச்சி
பெண்டுகள்வியாபாரஞ் — செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கட்டி — பினத்துத்திரியலாச்சி
சண்டைசாடிகளெல்லாம் — பணத்தையிறைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் — தரையினில்மருந்தாச்சி (கால)
பஞ்சாங்கபடிப்பெல்லாம் — பஞ்சாய்ப்பறந்துபோச்சி
பரச்சிக்குபணாந்தந்து — சிரப்பாய்நடக்கலாச்சி
அஞ்ச மற்பறச்சோற்றில் — அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் — அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி அந்தணராலேயே குடிகெட்டுப்போச்சி
துரைக்குபிறந்தவன்போல் — டொப்பிசட்டைகளாச்சி
ஜோடுஞ்செருப்பும்போச்சு — பூட்சுதூக்கலாச்சி
அடுப்பங்கரையிற்கூட — யிங்கிலீஷ்பேசலாச்சு
ஐயமார்குடிக்கவே — அடிக்கொருகடையாச்சி (கால)
சிமைதுரைகளெல்லாம் — காவியுடுத்தலாச்சி
சாதித்தமிழரெல்லாம் — சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி — கருப்புங்குடியாச்சி
கண்டவிடங்களெல்லாம் — பைபிள்விரைக்கலாச்சி
வேதங்கள்போச்சி கிறிஸ்தவர்கூச்சலேவேடிக்கையாச்சி
கோயில்குளங்களெல்லாம் — குட்டிசுவராய்போச்சி
குடியரதிகமாச்சி — கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாம் — கடையாய்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி — பேதியதிகமாச்சி
கலியுகநடத்தைக்கு — கடவுளும்சிரிக்குது
காலத்திற்கேத்தாப்போல் — மாரிகள்வருகுது
குளிருகாச்சலிற்பாதி — கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை — வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி யிப்படிமடிஞ்சியும் துள்ளுதேகூவிஐயோ
இன்றைக்கிருப்பவர் — நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த — வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு — வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் — ஆயிரம்சாவுது (கால)
பணங்கையில்வருதென்று — பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேற் — புலிபோலேதுள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ — மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் — சீச்சிபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே நி[illegible]ல்லாதழுதேநீ கெட்டுப்போகாதே

ஊற்றைமுடலைநம்பி	ஓதிபோலேநிகளதோ
ஊரைப்பகைத்துக்கொண்டு	வேறுடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு	கருமங்கள்தேடாதே(கால)

கலியுகச்சிந்து-முற்றிற்று.

கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம், அப்பனைபிள்ளையுதைக்குங்காலம், பண்ணினநன்றிமறக்குங்காலம்-பழிபாவதது க்கஞ்சாகலிகாலம். க

புருஷனைப்பெண்டீருதைக்குங்காலம்-பெற்றபெண்ணை தகப்பன் புணருங்காலம், தருமநெறியைமறக்குங்காலம்கெட்ட தருதலைக்கேற்றகலிகாலம். உ

கொண்டபுருஷனைத்திட்டுங்காலம்-இவள-கூலிகொடுத்து புணருங்காலம், முண்டைகள்பிள்ளை பெருங்காலமையா ஐயா-மானமில்லாதகலிகாலம். ௩

கட்டினமாது அலையுங்காலமிவன் காவியுடுத்தித்திரியுங்காலம் புட்டிபுட்டியாய்குடிக்குங்காலமையாபுளுகருக்கேற்கலிகாலம். ௪

பீயேயும்பியெல்லும் படித்துவிட்டு மவர் பிழைக்க சீவனமில்லாமல், கையேந்திப்பூரிகள்வாங்கிப்பிழைக்கிறார்கலியுகக்காலமிது வல்லவோ. ரு

விக்கிரமாதித்தனுளையிலுந்தர்ம்ம வேதநெறிநளன் காலத்திலும் அக்கிரமிப்படிகேட்டதில்லை ஐயோ அந்தணருத்தியோகஞ்செய்ததிலில்லை. சு

சொந்தபுருஷனைத்திட்டுங்காலமிவள் சொல்லாமற்றுய் வீடுபோகுங்காலம், கணவன்மனவியையழைக்கவந்தாலவனைக்கண்டபடியாகத்திட்டுங்காலம். எ

கள்ளத்தனமாய்புணர்ந்தபிள்ளை செத்துக் கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்லசமுசாரிபோலேமினுக்கியேநாட்டை கெடுக்குங்கலிகாலம். அ

புருஷனைப்பெண்சாதிதிட்டுங்காலமையா புருஷன்றலைபைக்குனியுங்காலம், கணவனைசாட்சியாய் வைத்துக்கொண்டு யிவள்கருத்தைப்போலேநடக்குங்கலிகாலம். கூ

சொந்தப்பெண்சாதிக்குப்பயந்துவிட்டு மவன்சொல்லாமற்றெயிலேறுங்காலம், போனாலும்போகிறேனென்றுசொல்லி யிவன்பெற்றுவளர்க்குங்கலிகாலம். ய௧

பொய்யானபத்திரமெழுதுங்காலம்சாட்சி பூட்டியேகோட்டில்கெலிக்குங்காலம், தெய்வப்பொருளைத் திருடுங்காலமிது தீவினைக்கஞ்சாக்கலிகாலம். ய௧

அருமையாயறியாமுரட்டுக்காலமிது கர்மியைப்போற்றுந்திரு
ட்டுக்காலம் சிறுமணலூர்முனிசாமிசொல்வாக்கியம்சோதித்துப்பார்
மிஉ
கலிகாலகுணம்.

கும்மிப்பாட்டுகள்-முற்றிற்று.

நொண்டிச்சிந்து.

ஆறுமாதக்கடன்காரர் அவருக்குஅண்ணனென்றுஉரைக்கலா
ம்மாறுபாடிகள் தாருமாறுகாயலார்கள் ஊரெங்குந்தானுய் வலியவ
ந்துகடன்கொடுத்து பததுக்குஅஞ்சிவட்டியாம் அந்தப் பத்திரமெ
ழுத்துக்கூலியதுவேரேயாம் தருமத்தின்காசிவேறேயாம் இப்படித
ந்திரமாயேழைகள் வாயிலடித்துதட்டுமுட்டு தவலைசொம்பு பெட்டி
முதல் தந்ததெல்லாம்வந்தமட்டும் வலித்துக்கொண்டுவாயிலொருக
ணக்குரைப்பார் கணக்கிலேவாங்கிவெகுநாளைப்போலேஎழுதிடுவா
ர்பணத்தைக்கொடுத்தனுப்புவார் வாங்கினவன் பாதிவழி போகுமு
தந்தி
ன்னேசம்மனெடுப்பார்.

இப்படியிவர்களெழுவாம் நாட்டுகளில்யீட்டிக்காரர்கோராமை
கேட்கபயமாம் சைதாப்பேட்டைதுண்டுகளையும் வைகுண்டசல்லா
ப்போல் கந்தைகளைவாரிக்கொண்டு வலைப்போல்புடவைகளையும் க
வைக்குதவா டாமேஜிதுண்டுதுண்டாய் கிழித்துக்கொண்டு செம்ம
ண்ணும்பகுடர்களும் நல்ல சேருபோலே குழைத்து தோய்த்துக்
கொண்டு கஞ்சியிலேபோட்டுபிழிந்து கந்தைகளைகருவாடுபோலுல
ர்த்திமடித்துக்கொண்டு நாட்டுபுரங்காடுமோடெலலாம் கும்பலாய்
நாளைந்துபேருக நுழைந்துவிடுவார் நெல்லூருவேஷ்டிகளென்பார்
நூலெல்லாம்நேராகசீமைசாயம்போகாதென்பார்மதுரைப்புடவை
களென்பார் இதுமாட்டுத்தோலைப்போலிருக்கும் கிழியாதென்பார்
கடனுக்குத்தருவோமென்பார் நித்தியங்காலணுவிழுக்காடு கொடுங்
களென்பார் தெரியாமல்கடனெடுத்தால் தெருவுவாசற்படியில் படு
த்துகாறிமுழிவார் கொடுத்தகடனைக்கேட்பார் அவர்குந்தின யிடத்
தைவிட்டுஅசையமாட்டார் சூனிபங்கள் வைப்போமென்பார் ஆடு
மாடுசுருண்டிடும்யேவலிதோசெய்குரோமென்பார். தந்தின

கடன்பத்திரம்.

உலகமறியாதவுஸ் ஒருவருங்காணுதமீ ஒருநாளுமில்லா தே
தியதில் ஊரில்லாதவூரிலிருக்கும் தலைகாய்ந்த தாண்டவராய முதலி
யார்குமாரன் சனியன்பிடித்த சாமபசதாசிவமுதலியாருக்கு சரிப்ப
டாதவூரிவிருக்கும் பித்தம்பிடித்தபேயாண்டி செட்டியார்குமாரன்
பேரில்லாதவன்பிரட்டியெழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்
பத்திரமாவதென்னவென்றல் இப்படியுய்என்னுடைய வீட்டிற்குக்
கிழக்குஅவனுடையவீட்டிற்குமேற்கு அவளுடையவீட்டிற்கு வட
க்குஇவளுடையவீட்டிற்குதெற்கு இந்தநாற்பாங்கெல்லைக் குட்பட

நிச்சயித்து சென்னப்பட்டணம் சிலாபணிராசிகும்பினிரூபா-௱ இந்தரூபாயஐந்நூற்றுக்குமாதம்-க-க்கு-ரூபா-ர-க்குவட்டிரூபா-க-ஆகஏறினவட்டியும் முதலும் தாங்கள்வேண்டாதபோதுகொடுக்காமற்போகக்கடவேனாகவும் ஒருசமயம்அப்படிக்குக் கொடுக்கும்படிக்குஅப்பியந்தப் பட்டால் தாங்கள் எந்தகோர்ட்டிலாவது போட்டுகோர்ட்டுச்சிலவில்லாமல் அசல்பூஜியமாய்ப்போகக்கடவிராகவும்இப்படிக்கு என்னுடையமனோராஜியில்சம்மதித்து எழுதிக்கொடுத்தகுதுவையில்லாதகடன்பத்திரம்.

இதற்குசாக்ஷி இவனேஅவனே எழுதினவனெவனோகையெழுத்து

நடுவீதிநாராயணன்

கலிகாலக்கண்ணாடி.

தகப்பனுக்குமகனுழவு பழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்பவனை உதைக்குங்காலம்
வலக்கைபிடித்தாசாணி சுற்றிவந்த
மாப்பிள்ளையைமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்குஅடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே க

வாய்வேகமாகறெயில் ஓடுங்காலம்
வாய்பேச்சுதந்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனைவிமனதின்போல் நடக்குங்காலம்
நாய்போலேவிலைமாதர் பெருத்தகாலம்
நம்பினோரென்றவரைக் கெடுக்குங்காலம்
காதலெல்லும்மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே உ

முண்டைச்சிகள்சந்தசந்தாய் திரியுங்காலம்
முலைகாட்டிமூசுண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைதமையன்பெண் டாளுங்காலம்
தமயன்பெண்டைதம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண்திண்ணைமேல் உட்காருங்காலம்
பரிகாசவார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்கமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கலிகால்மாமிந்த காலந்தானே ௩
மாமனையேமருமகளும் புணருங்காலம்
மாமிபார்மருமகனை மருவுங்காலம்

பெற்றவளும்பிள்ளைதனைச் சேருங்காலம்
பெண்ணவளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோர்த்தமையோ விருக்குங்காலம்
தடியர்களுஞ்சந்துசந்தாய்த் திரியுங்காலம்
காமமெனும்பெருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே ௪

சங்கையற்றுத்திண்ணைமேல் உட்காருங்காலம்
சமுசாரியென்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்பேரன்பெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிபுடனேஉடற்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே ௫

கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனேதாய்விடு சேரலாச்சு
பெண்ணவளுந்தாய்விடு போகலாச்சு
பெற்றவருங்கூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே ௬

அவுசாரிஉலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைதாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாப்பிள்ளை புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே ௭

பிள்ளைபெற்றுஆற்றோம் போடலாச்சு
புருஷனடித்தால்விறையைப் பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிகண்டபடி திரியலாச்சு
அண்டைவிட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரைஅன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்குபிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள்கண்டவர்கள் புணரலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே ௮

கலிகாலக்கண்ணாடி-முற்றிற்று.

———()———